## கரூர் மாநகராட்சி

2023ம் ஆண்டு ஜுலை மாதம் 27ம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசர கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.

### பொருள்கள்

1) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.16682/2023/CFC -1, நாள்.23.06.2023ல் கரூர் மாநகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் – tied Grant 2023–2024 ம் ஆண்டின் கீழ் இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்கு புதிதாக 25 எண்ணம் இலகு ரக வாகனம் (LCV) கொள்முதல் செய்து கொள்வதற்கு ரூ.182.50இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மதிப்பிற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 8176/2023)

**தீர்மான எண்.1315** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

2)கரூர் மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட வார்டு 12 முதல் 19 வரை மற்றும் வார்டுகள் 38 முதல் 42 வரை சிறுமின்விசை பம்புகள் மூலம் பிற உபயோகத்திற்கான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி சிறுமின்விசை பம்புகளில் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுகிறது.எனவே பொதுமக்களுக்கு இடையூறின்றி பிற உபயோகத்திற்கான தண்ணீர் வழங்குவதற்கு மேற்படி சிறுமின்விசை மோட்டார் பம்புகளை பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.14.90 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.14.90 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ6/6675/2023 )

**தீர்மான எண்.1316** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

3)கரூர் மாநகராட்சி கட்டளை நீர் சேகரிப்பு கிணற்றில் இயங்கும் நெம்பர்–1 நீர்மூழ்கி மோட்டார் மற்றும் ஸ்டார்ட்டர் மூலக்காட்டானூர் நீரூந்து நிலையத்தில் உள்ள 5 எச்.பி திறந்தவெளி கிணறு மோட்டார் மற்றும் பேனல் போர்டு , மூலக்காட்டானூர் நீரூந்து நிலையத்தில் முல்லை நகரில் 10 எச்.பி மோட்டார் மற்றும் பேனல் போர்டு, காந்திகிராமம் இரட்டை டேங்க் 15 எச்.பி திறந்தவெளி கிணறு மோட்டார் மற்றும் பேனல் போர்டுகள் கால ஓட்டத்தின் காரணமாக பழுதடைந்துள்ளதை அவற்றை சீர் செய்து மராமத்து செய்தால் மட்டுமே பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலும். எனவே மேற்கண்ட இடங்களில் உள்ள மோட்டார்கள் மற்றும் பேனல் போர்டுகள் பழுது நீக்கம் செய்யும்

பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்

**(இ6/ 6677 /2023)**

**தீர்மான எண்.1317** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**4)**கரூர் மாநகராட்சி மண்டலம் **3**க்குட்பட்ட அருணாச்சலம் நகர் , முதல் தெருவில் உள்ள **2** எச்.பி நீர்மூழ்கி மோட்டார் பயன்படுத்த இயலாத நிலையில் பழுது ஏற்பட்டுள்ளது. மேலும் வார்டு **15** முல்லை நகர் ஆழ்துளை கிணற்றில் உள்ள **7.50** எச்.பி மும்முனை இணைப்பு நீர்மூழ்கி மோட்டாரும் பயன்பாட்டில் பயன்படுத்த இயலாத வண்ணம் பழுது ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி இடத்தில் பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்கு இடையூறு இல்லாமல் இருக்க புதிய நீர்மூழ்கி மோட்டார் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**4.20** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.20 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ6/6676/2023)**

**தீர்மான எண்.1318** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

5)கரூர் மாநகராட்சி மண்டலம் **3**க்குட்பட்ட வார்டு எண்.**16** ஆர்.ஏ நகர் பகுதியில் சுமார் **40** குடியிருப்புகள் உள்ளன. மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்கப்படவில்லை எனவே மேற்படி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலவில்லை. மேற்படி பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் குடிநீர் இணைப்பு பெற தயாராக உள்ளதாலும், தற்போது அனைத்து வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியதாலும், இப்பகுதிக்கு குடிநீர் விநியோகக் குழாய் பதிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**5.00** இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு:

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ2/ 2023)**

**தீர்மான எண்.1319** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**6)**கரூர் மாநகராட்சி மண்டலம் **3**க்குட்பட்ட வார்டு எண்.**40** மாநகராட்சியின் வளர்ந்து வரும் பகுதியாகும். இங்கு புதிய குடியிருப்புகள் வந்த வண்ணம் உள்ளது. ஏற்கனவே குடிநீர் பகிர்மானக்குழாய்கள் இப்பகதியில் குறைந்த அளவே அமைக்கப்பட்டுள்ளது. அதனால் புதிய

குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. ஆதலால் மேற்படி புதிதாக உருவாக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க ஏதுவாக புதிய குடிநீர் விநியோகக் குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.4.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்

(இ2/2023)

**தீர்மான எண்.1320** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

7)கரூர் மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட வார்டு எண்.16 முத்து நகர் மற்றும் ஜெ ஜெ கார்டன் பகுதியில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணியின் போது குடிநீர் விநியோக குழாய்கள் சேதமடைந்துள்ளது. மேலும் மழை நீர் வடிகால் அடியிலேயே பெரும்பாலான பகுதியில் குடிநீர் விநியோகக் குழாய் செல்வதால் புதியதாக விநியோகக் குழாய் அமைக்க வேண்டிய அவசியம் உள்ளது. மேற்படி அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு புதிய குடிநீர் விநியோக குழாய் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2023)

**தீர்மான எண்.1321** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

8)கரூர் மாநகராட்சிக்கு குடிநீரானது கட்டளையில் காவேரி ஆற்றில் இருந்து வரப்பெறுகிறது. குடிநீரானது மூன்று நீரேற்று நிலையங்களில் அதாவது தாந்தோணி பழைய திட்டம் 300 mm AC குழாய் மூலமும், சணப்பிரட்டி திட்டமானது 250 mmAC குழாய்கள் மூலமும், சணப்பிரட்டி முல்லை நகர் திட்டம் 160 mm AC HSCமூலம் குடிநீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீரேற்றம் குழாய்கள் அமைத்து நிறைய ஆண்டுகள் ஆகிவிட்டபடியாலும் தற்போது மணல் லாரிகள் அதிகம் செல்வதாலும் அவ்வவ்போது உடைப்புகள் ஏற்படுகிறது. மேற்படி உடைப்புகளை உடன் சரிசெய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.12.00 இலட்சத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ6/6673 /2023)**

**தீர்மான எண்.1322** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

9)கரூர் மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.16ல் கிருஷ்ணா நகர் 4வது, 5வது கிராஸ் திரு.வி.க நகர், ஜெ.ஜெ கார்டன், பெரியார் நகர் 2வது, 3வது , 4வது குறுக்கு தெருக்களில் சிறுபாலங்கள் சீரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.8.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/4489 /2023)**

**தீர்மான எண்.1323** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**10)**கரூர் மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.42 முத்தலாடம்பட்டி மெயின் ரோட்டில் நந்தினி காம்ப்ளக்ஸ் எதிரே மழை நீர் வடிகால் மற்றும் சிறுபாலம் இல்லாத காரணத்தினால் மழை காலங்களில் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் இப்பகுதிக்கு கீழ்புறமுள்ள காமராஜ் ரோடு பகுதிக்கு மழை நீர் வடிகால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. ஆதலால் நந்தினி காம்ப்ளக்ஸ் எதிரே உள்ள பகுதியிலும் மழை நீர் வடிகால் அமைத்தால்தான் அப்பகுதியில் மழை நீர் முழுவதும் விரைவாக வடிந்து எந்த வித சுகாதார கேடும் ஏற்படா வண்ணம் அமையும். எனவே மேற்படி பகுதியில் மழை நீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.25 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.9.25 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/4476/2023)**

**தீர்மான எண்.1324** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

11)கரூர் மாநகராட்சி மண்டலம் 1க்குட்பட்ட வார்டு எண்.4 வாங்கப்பாளையம் மெயின் ரோட்டில் உள்ள பழைய மழை நீர் வடிகால் சேதமடைந்து மழை நீர் மற்றும் கழிவு நீர் சரிவர செல்லாததால் மழை காலங்களில் சாலையின் ஓரங்களில் தேங்கி சுகாதார கேடு மற்றும் போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. எனவே சேதமடைந்த மழை நீர் வடிகாலினை புதிதாக அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.10.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/4086 /2022)**

**தீர்மான எண்.1325** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**12)**கரூர் மாநகராட்சியில் தற்போது புதியதாக செயற்பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு செயற்பொறியாளர் பணியமர்த்தப்பட்டுள்ளதால், SCORPIOஈப்பு வாகனம் TN 47 AH 6364 செயற்பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மாநகராட்சியின் வார்டு எண்.1 முதல் 48 வரையுள்ள பகுதிகளில், பல்வேறு திட்டப்பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் செயல்பாட்டில் உள்ளதால், மேற்கண்ட பணிகளை மேற்பார்வையிட உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு ஈப்பு வாகனம் இல்லாததால், புதியதாக ஈப்பு வாகனம் Mahindra Bolero Neo Nio (Model) வாகனம் Gem Rate வாங்குவதற்கு செலவினம் ரூ.,11,60,000/– க்கு ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் சமர்ப்பிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட பணியை மாமன்றத்தின் அனுமதி பெற்று, கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களுக்கு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1326** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

13)கரூர் மாநகராட்சி புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சியாகும். மேற்படி மாநகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மாநில அரசிதழ் எண்.594 செவ்வாய்க்கிழமை 14.12.2021ல் வெளியிடப்பட்டுள்ளது. மாநகராட்சியின் 3வது மண்டலம் இயங்குவதற்கு கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் இல்லாததால் 3வது மண்டலம் அலுவலகம் வாடகை கட்டிடத்தில் ஜீன் 2023 முதல் இயங்குவதற்கு அனுமதியும், அதற்கான வாடகை கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ.25000/– வீதம் ஒரு வருட காலத்திற்கு ரூ.3,00,000/– ம் வரிகள் இல்லாமல் வழுங்கவும், மேற்படி கட்டிடம் ஆனது கரூர் வட்டம், கருர் –4 காந்திகிராமம், திண்ணப்பா நகர் கிழக்கு கதவு எண்.12–B1ல் உள்ள தரைதளம் மற்றும் முதல் மாடியில் உள்ள ஆர்.சி.சி கட்டிடத்தில் இயங்குவதற்கும் மற்றும் வீட்டிற்கான முன் பணமாக (Advance) ரூ.75000/– என்று ஆக மொத்தம் ரூ.3,75,000/– க்கு மாமன்றத்தின் தீர்மானம் எண்.334, நாள்.30.06.2022ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஜீலை 2023ம் மாதம் முதல் ஜீன்/2024 வரை ஒரு வருட காலத்திற்கு அக்கட்டிடத்திலேயே மண்டலம் – 3 அலுவலகம் செயல்படுத்துவதற்கு அனுமதியும், மாத வாடகை ஒப்பந்தபத்திரத்தின்படி ஒரு வருடம் முடிவில் அடுத்த வருடத்திற்கு 5 % கூடுதலுடன் ஒரு மாதத்திற்கு ரூ.26250/– ஒரு வருடத்திற்கு ரூ3,15,000/– மும் மற்றும் மின்சாரம் செயல்படுத்தியதற்கு ஒரு மாதத்திற்கு சுமார் ரூ.1000/– சேர்த்து ஒரு வருடத்திற்கு ரூ.3,27,000/– ஐ வீட்டு உரிமையாளர் திரு.கே. தனபால் .அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.3.27 இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/4366/2022)

**தீர்மான எண்.1327** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

14)கரூர் மாநகராட்சி அலுவலக பணிக்காக எழுத்துப்பொருட்கள் A4 மற்றும் Legal பேப்பர், கணிணி ரசீதுகள், வசூலிக்கப்படும் ரசீதுகள் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் சப்ளை செய்யும்பணிக்கு முதல் முறையாக 14.07.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

<u>வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.25.00லட்சம்</u>

1. M/s.The Erode District Women Stationary printing & Tailoring works India Co.op Society Ltd, Erodeமதிப்பீட்டை விட0.34%சதம் குறைவு
2. M/s.Palladam women printing & stationery manufactures Industrial co-operative Society Limited, Palladam மதிப்பீட்டை விட 2.24% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1 மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.The Erode District Women Stationary printing & Tailoring works India Co.op Society Ltd, Erodeநிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம். **(இ1/4497/2023)**

**தீர்மான எண்.1328** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**15)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட தாந்தோணி (புல எண்.708) பகுதிக்கு கம்பி வேலி அமைக்கும் பணிக்கு முதன் முறையாக 28.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.30லட்சம்**

1. M/s,Sunmathi Construction, Karur மதிப்பீட்டை விட 0.07%சதம் குறைவு
2. M/s.Magil Construction, Karurமதிப்பீட்டை விட 0.78% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஆ1/8589/2023, நாள்.01.06.2023ல் ரூ.4.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது (இ1/4357 /2022)
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s,Sunmathi Construction, Karur**ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 30.06.2023ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.1329** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**16)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட கரூர் பகுதி (புல எண்.461/8) பகுதிக்கு கம்பி வேலி அமைக்கும் பணிக்கு முதன் முறையாக 28.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.11.50லட்சம்**

1. M/s,Sunmathi Construction, Karur மதிப்பீட்டை விட 0.07%சதம் குறைவு
2. M/s.Magil Construction, Karurமதிப்பீட்டை விட 1.24% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஆ1/8589/2023, நாள்.01.06.2023ல் ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s.Sunmathi Construction, Karur**ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 30.06.2023ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.(இ1/4357 /2023)

**தீர்மான எண்.1330** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**17)**கரூர் மாநகராட்சி ஆச்சிமங்கலம் (புல எண்.**268**) பகுதிக்கு கம்பி வேலி அமைக்கும்பணிக்கு முதன் முறையாக **28.06.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.4.30லட்சம்**

1. M/s,Sunmathi Construction, Karur மதிப்பீட்டை விட **0.07**%சதம் குறைவு
2. M/s.Magil Construction, Karurமதிப்பீட்டை விட **4.66**% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.ஆ**1/8589/2023**, நாள்.**01.06.2023**ல் ரூ.**4.30** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s,Sunmathi Construction, Karur**ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **30.06.2023**ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.**(இ1/4357 /2023)**

**தீர்மான எண்.1331** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**18)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021 – 2022**கரூர் மாநகராட்சி, **45**வது வார்டு ராயனூார் காலனி பகுதியில் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் அமைத்தல் பணிக்கு நான்காம் முறையாக **05.07.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.50லட்சம்**

1. Thiru.N.Krubakaran, Karurமதிப்பீட்டை விட **0.11**% சதம் குறைவு
2. Thiru.M.Loganathan, Karurமதிப்பீட்டை விட **2.41**% சதம் அதிகம்

**அலுவலக குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ**3/3516/2021–5**, நாள்.**04.05.2023**ல் ரூ.**7.50** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.N.Krubakaran, Karurஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் **05.07.2023**ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 7392/2022)**

**தீர்மான எண்.1332** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**19)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021 – 2022** கரூர் மாநகராட்சி, கரூர் மாநகராட்சி **48**வது வார்டு காளியப்பனூார் பகுதியில் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் அமைத்தல் பணிக்கு நான்காம் முறையாக **05.07.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

**வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.50லட்சம்**

1. Thiru.N.Krubakaran, Karurமதிப்பீட்டை விட 0.09% சதம் குறைவு

2. Thiru.M.Loganathan, Karurமதிப்பீட்டை விட 2.86% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/3516/2021–5, நாள்.04.05.2023ல் ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.N.Krubakaran, Karurஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 05.07.2023ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 7392/2022)

**தீர்மான எண்.1333** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

20)சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2021 – 2022 கரூர் மாநகராட்சி, 34வது வார்டு காமராஜ் ரோடு பகுதியில் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டிடம் அமைத்தல் பணிக்கு நான்காம் முறையாக 05.07.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

வேலையின் மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00லட்சம்

1. Thiru.N.Krubakaran, Karurமதிப்பீட்டை விட 0.06% சதம் குறைவு

2. Thiru.M.Loganathan, Karurமதிப்பீட்டை விட 4.40% சதம் அதிகம்

அலுவலக குறிப்பு:

1. மேற்படி பணிக்கு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ3/3516/2021–5, நாள்.04.05.2023ல் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது
2. மேற்படி பணிக்கு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thiru.N.Krubakaran, Karurஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 05.07.2023ல் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/ 7392/2022)

**தீர்மான எண்.1334** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

21) கரூர் மாநகராட்சியில் தற்போது பிரதான அலுவலகத்தில் சுமார் 40 கணிணிகள் உள்ளன. மேலும் மாநகராட்சியின் பிரதான சர்வர் மற்றும் சுவிட்சுகள் உள்ளன. இவை அனைத்திற்கும் மின்தடை ஏற்படும்போது சாதனங்கள் பழுதாகமல் இருக்க ஆன்லைன் UPS பயன்படுத்தப்படுகிறது.மேற்படி ஆன்லைன் UPS அவ்வப்போது பராமரிப்பு செய்யப்படவேண்டும். அப்போதுதான் மின்தடை ஏற்படும் போது கணிணியில் உள்ள டேட்டாக்கள் பாதுகாப்பாக வைத்து தொடர்ந்து இயக்க முடியும் எனவே இப்பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆண்டு பராமரிப்பு மதிப்பீட்டுத் தொகைக்கு ரூ.1,50,000/–மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகைரூ.(GST இல்லாமல்) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1) | M/s.Spectra Automation, salem | 125600/- |
| 2) | M/s.Hybrid Communication, Erode | 130000/- |
| 3) | M/S.Vickram Technologies, Erode | 127400/- |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Spectra Automation, salem அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ. 1,48,208/-(GST உட்பட) மாநகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம்பின்னேற்புவழங்கலாம். (இ6/2022)

**தீர்மான எண்.1335** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

22)கரூர் மாநகராட்சியில் தற்போது இயங்கி வரும் இலகுரக வாகனங்கள் சுமார் 20 ஆகும். மேற்படி இலகுரக வாகனங்கள் திடக்கழிவு சேகரம் செய்ய நகருக்குள் செல்லும் போது பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் அறிவிப்பு செய்தால் திடக்கழிவு மேலாண்மை எளிதாக இயங்கும். மேலும் மாநகராட்சியின் நிதியும் சேமிக்கப்படும். எனவே திடக்கழிவு வாகனங்களுக்கு ஒலிபெருக்கி செய்யும் பணிக்கு ரூ.1,85,000/–மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகைரூ. (GST இல்லாமல்) |
|---|---|---|
| 1) | M/s.Spectra Automation, salem | 154000/- |
| 2) | M/s.Hybrid Communication, Erode | 166000/- |
| 3) | M/S.Vickram Technologies, Erode | 160000/- |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 விதி எண்.15ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Spectra Automation, salem அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.1,81,720/-(GST உட்பட) மாநகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம்பின்னேற்புவழங்கலாம்.(இ6/2022)

**தீர்மான எண்.1336** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

23)கரூர் மாநகராட்சி மண்டலம் 1 முதல் 4 க்கு உட்பட்ட 48 வார்டுகளில் 23.07.2022 அன்று நகரில் உள்ள கட்டிடக்கழிவுகளை அகற்றவும், மற்றும் பொதுமக்கள் கட்டிடக்கழிவுகளை அகற்றி கொண்டு ஒரு இடம் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு அரிக்காரம்பாளையம் கம்போஸ்ட் யார்டு பகுதி அறிவிக்கப்பட்டது. மேற்படி கம்போஸ்யார்டில் நகரில் தேக்கமடைந்த கட்டிடக்கழிவுகளை அகற்றும் பணிக்குரூ.1.80 இலட்சம் மதிப்பீட்டில் பணியின் அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று உடனடியாக பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு தொகை. |
|---|---|---|
| 1) | M/s.Sri.Krishna Traders, Karur | 0.42% குறைவு |

| | | |
|---|---|---|
| 2) | M/s.RPS Construction, Karur | 0.35% அதிகம் |
| 3) | M/s.CVM & Co, Karur | 0.78% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் **1920** விதி எண்.**15**ன்கீழ் நிர்வாக அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sri.Krishna Traders, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகைரூ. **1,76,520/-**மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். **(இ1/7709/2022)**

**தீர்மான எண்.1337** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**24)**கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டதாந்தோணி கிராமம் புல எண்.**344** மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 0.34.50 ஏர்ஸ் பரப்பளவு உள்ள அரசு புறம்போக்கு (பாதை) இடத்தில் ஹெக்டேர் 0.04.30 ஏர்ஸ் இடத்தில் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் அனுப்பி வைக்க கோரி வந்துள்ள வட்டாட்சியர், கரூர் அவர்களின் **06.07.2023**ம் தேதிய ந.க.அ**4/2060/2023** கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி தாந்தோணி கிராமம் புல எண்.**344** மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 0.34.50 ஏர்ஸ் பரப்பளவு உள்ள அரசு புறம்போக்கு (பாதை) நிலத்தில் ஹெக்டேர் 0.04.30 ஏர்ஸ் பரப்பளவு இடமானது ''பாதை'' என வகைபாடு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு இடம் என்பதால் மேற்படி இடத்தில் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட தடையின்மை சான்று வழங்கலாம்.

**(6523/2023/எப்1)**

**தீர்மான எண்.1338** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**25)**கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இனாம் கரூர் கிராமம் புல எண்.**335/2**—ல் அரசு புறம்போக்கு வண்டிப்பாதை மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 0.83.5—ல் உள்ள நிலத்தில் ஹெக்டேர் 0.02.82 ஏர்ஸ் மற்றும் புல எண்.**332** விஸ்தீரணம் ஹெக்டேர் 2.40.0 ஏர்ஸ் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஹெக்டேர் 0.00.66 ஏர்ஸ் ஆகா மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 0.03.48 ஏர்ஸ் பரப்பளவு இடத்தில் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் அனுப்பி வைக்க கோரி வந்துள்ள வட்டாட்சியர், கரூர் அவர்களின் **17.07.2023**ம் தேதிய ந.க.அ**4/0643/2023** கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

கரூர் மாநகராட்சிக்குட்பட்ட இனாம் கரூர் கிராமம் புல எண்.**335/2**—ல் அரசு புறம்போக்கு வண்டிப்பாதை மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 0.83.5—ல் உள்ள நிலத்தில் ஹெக்டேர் 0.02.82 ஏர்ஸ் மற்றும் புல எண்.**332** விஸ்தீரணம் ஹெக்டேர் 2.40.0 ஏர்ஸ் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் ஹெக்டேர் 0.00.66 ஏர்ஸ் ஆகா மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 0.03.48 ஏர்ஸ் பரப்பளவு இடமானது அரசு புறம்போக்கு வண்டிப்பாதை மற்றும் நத்தம் என வகைப்பாடு செய்யப்பட்ட இடம் என்பதால் மேற்படி இடத்தில் நகர்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட தடையின்மை சான்று வழங்கலாம். **(7737/2022/எப்1**

**தீர்மான எண்.1339** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**26)**கரூர் மாநகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா இயக்கம் ( Swatch Bharath Mission) 2.0 திட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளான குப்பைகளை தரம் பிரித்து வாங்குதல் பொது மக்களிடையே விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2983/2022/SBM, நாள்.24.02.2022ல். இம்மாநகராட்சிக்கு 24 பரப்புரையாளர்கள் 3 மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளர் என ஒதுக்கீடு செய்து 2022–2023 முதல் 2025 –2026 வரை நான்கு ஆண்டுகளுக்கு ஒப்பந்த முறையில் பணி அமர்த்தி கொள்ளவும் 2022–2023ம் ஆண்டுக்கு 58.84 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் 29.04.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண்.169, நாள்.27.05.2022ல் அனுமதிக்கப்பட்டு தற்போது மேற்படி பணியானது 31.05.2023–ல் ஒப்பந்த காலம் முடிவடைந்துள்ளது.

மேற்கண்ட பணியினை மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்ய கோரி M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை அவர்களின் 24.05.2023ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியினை 01.06.2023 முதல் 31.05.2024ம் தேதி வரை ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், மேலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.06.2023 முதல் 31.05.2024ம் தேதி வரை ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.58,84,610/–ஐ இலட்சத்தில் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி பணிக்காகும் உத்தேசசெலவினத் தொகை ரூ.58,84,610/–ஐ SBM 2.0 திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3)மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் இம் மாமன்றம் அங்கீகரிக்கலாம். **(இ1/1907/2022)**

**தீர்மான எண்.1340** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**27)**கரூர் மாநகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் வீட்டுக்கு வீடு குப்பை வாங்கும் பணி Ourland Engineering Works Pvt Ltd, சென்னை நிறுவனத்தின் மூலம் 409 பணியாளர்களைக் கொண்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை தவிர நுண் உரம் மையம், சாலை மற்றும் நெடுஞ்சாலை, பேருந்து நிலையம், மார்கெட் ஆகிய பகுதிகளை சுத்தம் செய்தல், சாக்கடை மண் அகற்றுதல், சமுதாய கழிப்பிடம், பொது கழிப்பிடம் மற்றும் பள்ளி வளாகம் சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்கு திட்ட அளவுகோளின் படி 398 பணியாளர்கள் தேவைப்படுகிறது. இந்நிலையில் 198 மாநகராட்சி நிரந்தர தூய்மை பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும் பற்றாக்குறையாக உள்ள 200 பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் பணி அமர்த்திக்கொள்ள நிர்வாக அனுமதி பெறுவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் நிர்வாக அனுமதி பெற்று பணி மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதால் பொது சுகாதார நலன் கருதி பற்றாக்குறையாக உள்ள 200 பணியாளர்களை கொண்டு சுகாதாரப்பணிகளை மேற்கொள்ள, ஏற்கனவே பொது சுகாதாரப்பணி மேற்கொண்டு வந்த

Black Cat Solution, சென்னை நிறுவனத்தினருக்கே ஏற்கனவே வழங்கியுள்ள விலை விகிதத்திலும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு **22.07.2023** முதல் **21.10.2023** வரை மூன்று மாத காலத்திற்கு மட்டும் பணி நீட்டிப்பு செய்தும், மூன்று மாதத்திற்கான செலவினத் தொகை ரூ.**97,23,848/–**ஐ பொது நிதி மற்றும் திடக்கழிவு பயணர் கட்டணத்திலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசரம் அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டதை இம்மாமன்றம் அங்கீரிக்கலாம். **(எச்1/3280/2018)**

**தீர்மான எண்.1341** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**28)**கரூர் மாநகராட்சி மண்டலம் 2க்குட்பட்ட வார்டு எண்.**32** திருவள்ளுவர் மைதானத்தின் மேற்கு பகுதியில் இராஜலிங்கம் மன்றம் இருக்கும் இடத்தில் கரூர் மாவட்டத்திற்கான மாவட்ட மத்திய நூலகம் கட்டும் பணிக்கு ரூ.**6.90** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு பொதுமக்களின் பங்களிப்பு நிதியிலிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதாகவும், இப்பணியினை மாநகராட்சி மூலம் நமக்கு நாமே திட்டத்தில் மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, மாநகராட்சி மூலம் இப்பணியினை மேற்கொள்ள விரிவான திட்டக் கருத்துரு தயார் செய்ய வேண்டியதாக உள்ளது. மண் பரிசோதனை மேற்கொண்டு Structural Design பெற்று அதனடிப்படையில் விரிவான திட்ட மதிப்பீடு ரூ.**6.90** கோடிக்கு தயார் செய்யவும், இதற்கான கட்டணம் ரூ.**6.90** இலவட்சம் செலவினம் மேற்கொள்ளவும், தனியார் கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறுவதற்கும், மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.**6.90** இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/4583/2023)**

**தீர்மான எண்.1342** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**29)**கரூர் மாநகராட்சி மண்டலம் **4**க்குட்பட்ட வார்டு எண்.**48** பழைய காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் இருந்த இடத்தில் கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதி (working Womens Hostel) கட்டும் பணிக்கு ரூ.**5.00** கோடி மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு பொதுமக்களின் பங்களிப்பு நிதியிலிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதாகவும் இப்பணியினை மாநகராட்சி மூலம் நமக்கு நாமே திட்டத்தில் மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

எனவே, மாநகராட்சி மூலம் இப்பணியினை மேற்கொள்ள விரிவான திட்டக்கருத்துரு தயார் செய்ய வேண்டியதாக உள்ளது. மண் பரிசோதனை மேற்கொண்டு Structural design பெற்று அதனடிப்படையில் விரிவான திட்ட மதிப்பீடு ரூ.**5.00** கோடிக்கு தயார் செய்யவும், இதற்கான கட்டணம் ரூ.**5.00** இலட்சம் செலவினம் மேற்கொள்ளவும், தனியார் கலந்தாலோசகர் மூலம் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறுவதற்கும், மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.5.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
**(இ1/4588/2023)**

**தீர்மான எண்.1343** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**30)** கரூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் நாள்தோறும் வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் தனித்தனியாக சேகரம் செய்யப்பட்டு மக்கும் குப்பைகள் நுண்ணுயிர் உர செயலாக்க மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு Shredding Machine மூலம் அரைக்கப்பட்டு தொட்டிகளில் தொடங்கி EM Solution சேர்த்து 45 நாட்களுக்கு பின் உரமாக மாற்றப்பட்டு விவசாய பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகிறது. மாநகராட்சி பகுதிகளில்10 நுண்ணுயிர் உரம் செயலாக்க மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்த மையங்களில் செயல்பட்டு வரும் Coveyor belt மற்றும் Shredding Machine மின் மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிக்கப்படுவதால் மாநகராட்சி பகுதிகளிலுள்ள 10 நுண்ணுயிர் உர செயலாக்க மையங்களில் உள்ளShredding Machine 10 எச்.பி மின்மோட்டார், 2 எச்.பி மின் மோட்டார் மற்றும் Coveyor belt ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் மேற்கொள்ள ஓராண்டிற்கான பராமரிப்பு பணிகள் மற்றும் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுது பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.11.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காககும் செலவினத் தொகை ரூ.11.00 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்
(இ1/4584/2023)

**தீர்மான எண்.1344** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**31)**திருமதி.சாந்திபாலாஜி, 31வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்
இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.31 லட்சுமிபுரம் வடக்கு மற்றும் லட்சுமிபுரம் தெற்கிற்கு இடையில் இருக்கும் மழைநீர் மற்றும் கழிவு நீர் வடிகால் பல வருடங்களாக சேதமடைந்து இருப்பதால், இந்த கழிவுநீர் மற்றும் மழைநீர் வடிகாலால் பொது மக்களுக்கு பெரும் சிரமம் ஏற்படுகின்றது. எனவே, இந்த வடிகால் புதிதாக கட்டித் தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1345** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**32)**திரு.இரா.வேலுசாமி, 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்
இம்மாநகராட்சிக்குட்பட்ட 48வது வார்டில் சின்னமநாயக்கன்பட்டி மேற்கு முகமாக செல்லும் ரோட்டில் தெருவிளக்கு அமைத்தும், சுபாஸ் சந்திரபோஸ் நகர் இரண்டு தெருக்களுக்கும் தெருவிளக்கு அமைத்து தருமாறும், மேலும் மட்டிப்பள்ளம் ஊருக்கு ரோட்டிலிருந்த மேற்கு முகமாகவும் புதிய அலுமினிய கம்பிகள் இழுத்து தெருவிளக்குகள் அமைத்து தருவதற்கு இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1346** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

மேயர்
கரூர் மாநகராட்சி